



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"



FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
✓ DIGITAL MARKETING
✓ WEB DEVELOPMENT
✓ SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி, சங்கரன்கோவில்



Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 313 | 06.05.2026 | WEDNESDAY | CHITHIRAI: 23 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 313 | 06.05.2026 | புதன்கிழமை | சித்திரை : 23 | விலை : ரூ.5/-


## நேரு உள்விளையாட்டு அரங்கில் பிரமாண்ட விழா

# "மே 7ல் பதவியேற்கும் விஜய்"

## புதிய அரசு பதவியேற்பு குறித்து தலைமைச் செயலாளர், டிஜிபி, அதிகாரிகள் ஆலோசனை

சென்னை: மே.6-

தமிழகத்தில் புதிதாக அரசு பொறுப்பேற்கவுள்ள நிலையில், தலைமைச் செயலாளர் மற்றும் டிஜிபி ஆகியோர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.



சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சாய்குமார், உள்துறை செயலாளர் மணிவாசன், காவல் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் மற்றும் சென்னை காவல் ஆணையர் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. இதனையடுத்து தவெகவின் சட்டமன்றக் குழு தலைவராக அக்கட்சியின் தலைவர் விஜய் இன்று ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தச் சூழலில், ஆட்சியமைக்க உரிமை கோரி ஆளுநருக்கு விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

தவெக தலைமையிலான புதிய அரசு அமையவுள்ள நிலையில், பதவியேற்பு விழா மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசிக்க இன்று தலைமைச் செயலகத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சாய்குமார், உள்துறை செயலாளர் மணிவாசன், காவல் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் உள்ளிட்ட பல்வேறு உயர் அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர்.

சென்னை: மே.6-

தமிழகத்தின் புதிய முதல்வராக நடிகர் விஜய் மே 7ம் தேதி பதவியேற்கிறார். சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் அதற்கான விழா நடைபெறுகிறது.

நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் தனித்து போட்டி யிட்ட தவெக 108 தொகுதிகளில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. பெரும்பான்மைக்கு தேவையான இடங்கள் குறைவாக இருந்த போதும், இன்று கவர்னரை சந்தித்து ஆட்சி அமைக்க விஜய் உரிமை கோர உள்ளார்.

இந் நிலையில் மே 7ம் தேதி அவர் தமிழகத்தின் புதிய முதல்வராக பதவியேற்க உள்ளார் என்ற தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. இதற்கான பிரமாண்ட விழா சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடக்க இருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் மற்றும் ஆயத்த பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன.



பதவியேற்பு விழா மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து தலைமை செயலாளர், உள்துறை செயலாளர், டிஜிபி மற்றும் சென்னை மாநகர போலீஸ் கமிஷனர் ஆகியோர் சென்னையில் ஆலோசனை நடத்தி உள்ளனர்.

முக்கிய கட்சிகளின் விஜபி வேட்பாளர்களை தோற்கடித்தவர்களுக்கு அதீத முக்கியத்துவம் அமைச்சரவையில் தரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, கட்சியின் பொதுச் செயலளார் ஆனந்த், ஆதவ் அர்ஜூனா, செங்கோட்டையன், நிர்மல்குமார் ஆகியோருக்கு முக்கிய பொறுப்புகள் வழங்கப்படும் வாய்ப்புகள் காணப்படுகின்றன.

அருண்ராஜ், ராஜ் மோகன், விஜய் சரவணன், கல்லாணை, தமிழன் பார்த்திபன், முகமது பர்வேஸ் ஆகியோரும் அமைச்சர்களாகும் வாய்ப்புகளை பெற்றுள்ளனர். இவர்களை தவிர பெண்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் தரும் முடிவில் இருக்கும் கட்சியின் தலைவர் விஜய், திருப்பூர் சத்தியபாமா, விஜயலட்சுமி ஆகியோருக்கும் அமைச்சரவையில் இடம்தரலாம் என்று தெரிகிறது.

## காட்பாடியில் வரலாற்று சாதனை வாய்ப்பை இழந்த துரைமுருகன்

வேலூர்: மே.6-

திமுக பொதுச் செயலாளர் துரை முருகன் 13வது முறையாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றால் வரலாற்று சாதனையில் இடம் பிடிக்கும் வாய்ப்பை இழந்தார். தமிழக சட்டப்பேரவைக்கான 17 வது தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன.



தமிழ்நாட்டில் 13 முறை எம்எல்ஏவாக தேர்வானவர் முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி. அவரது சாதனையை சமன் செய்யும் இடத்தில் திமுகவின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான துரைமுருகன் 2026 சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொண்டார்.

அமைச்சர் துரைமுருகன் இதுவரை 13 தேர்தல்களை சந்தித்துள்ளார். 1971ம் ஆண்டு முதன் முறையாக காட்பாடி தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட துரைமுருகன், ராணிப்பேட்டை தொகுதியில் 1977 மற்றும் 1980ம் ஆண்டுகளிலும், பிறகு காட்பாடி தொகுதியில் தொடர்ந்து போட்டியிட்டு வருகிறார்.

இதில், காட்பாடி தொகுதியில் 1984 மற்றும் 1991ம் ஆண்டுகளில் தோல்வியை தழுவி உள்ளார். அமைச்சர் துரை முருகன் பொதுப்பணி துறை, நீர்வள துறை, சட்ட துறை, கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் துறை, மின்சார துறை அமைச்சராகவும் இருந்துள்ளார். நீர்வள துறையில் நீண்ட அனுபவம் பெற்றவர்.

திமுகவில் அண்ணா, மு.கருணாநிதி, பேராசிரியர் க.அன்பழகன் ஆகியோரை தொடர்ந்து நான்காவதாக திமுகவின் பொதுச் செயலா ளராக அமைச்சர் துரைமுருகன் உள்ளார்.

சென்னை அனைத்து கல்லூரிகள் தமிழ் மன்ற தலைவர், 1965ல் இந்தி எதிர்ப்பு போரில் முதலில் கைதான மாணவர் தலைவராகவும், அண்ணாவுடன் சிறைவாசம், மிசாவில் ஓராண்டு சிறை, திமுகவில் தணிக்கை குழு உறுப்பினர், மாணவர் அணி செயலாளர், தலைமை கழக முதன்மை செயலாளர், திமுக துணை பொதுச்செயலாளர், திமுக பொருளாளர் உள்ளிட்ட பதவிகளை வகித்துள்ளார்.

இந்த தேர்தலில் துரை முருகன் 13வது முறையாக போட்டி யிடுவது சாதனையாக கருதப்பட்டது. வயதான காலத்தில் அவர் போட்டியில் இருந்தது ஒரு பக்கம் சர்ச்சையை ஏற்படுத்தியது. ஆனால், இந்த முறை எப்படியும் வெல்ல வேண்டும் என்ற முனைப்புடன் அமைச்சர் துரைமுருகன் குடும்பத்தினரும், அவரது ஆதரவாளர்களும் வேலை செய்தனர்.

துரைமுருகன் வயதான காலத்தில் ஏன் சாதனைக்காக போட்டியிட வேண்டும் என தேர்தல் பிரச்சார கூட்டத்தில் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி கேள்வி எழுப்பி யிருந்தார். அதற்கு பதி லளித்த துரைமுருகன், 'எடப்பாடியை என்னுடன் ஓட்டப் பந்தயத்துக்கு வரச்சொல்லுங்கள்' என்றார்.

இப்படி காட்பாடி தேர்தல் களத்தில் திமுகவும், அதிமுகவும் முண்டியடித்து பிரச்சாரம் செய்து வந்த நிலையில் தவெக வேட்பாளர் டாக்டர் சுதாகர், தனக்கு தெரிந்த பிரச்சாரத்தில் தீவிரம் காட்டி வந்தார். வாக்கு எண்ணிக்கை தொடங்கியதில் இருந்து துரைமுருகன் தரப்பினர் எதிர்பார்த்த எந்த திருப்பு முனையும் களத்தில் ஏற்படுத்த முடியவில்லை என்பது தெரியவந்தது.

1991ம் ஆண்டு தேர்தலுக்கு பிறகு துரைமுருகன் இந்த தேர்தலில் காட்பாடியில் தொகுதியில் தோல்வியை தழுவியுள்ளார்.

காட்பாடி தொகுதியில் 2 முறை அதிமுக விடம் வெற்றியை பறிகொடுத்தவர் இந்த முறை தவெகவிடம் பறிகொடுத்துள்ளார். இதன் மூலம், முன்னாள் முதல் வர் கருணாநி தியின் 13வது முறை எம்எல்ஏ ஆகும் சாதனை முறியடிக்கும் அவரது கனவு நிறைவேறவில்லை.

## மருத்துவ சுகாதாரத்துறை அமைச்சராகிறார்?

# சபாநாயகர் கோட்டையைச் சரித்த இளம் மருத்துவர் சதீஷ் கிறிஸ்டோபர்!

திசையன்விளை, மே.06

தமிழக சட்டமன்றத் தேர்தல் 2026ன் முடிவுகள் வெளியாகிய வேளையில், ஒட்டுமொத்த மாநிலத்தின் கவனமும் இராதாபுரம் தொகுதியின் பக்கம் திரும்பியுள்ளது. ஒரு பெரும் அரசியல் ஆளுமையை இளம் இரத்தமான டாக்டர் சதீஷ் கிரிஸ்டோபர் வீழ்த்தியுள்ளது அரசியல் வட்டாரங்களில் நிலநடுக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**ஜாம்பவானைச் சரித்த சாதனை:**

அரசியல் முதிர்ச்சியும், சபாநாயகர் என்ற அதிகார பலமும் கொண்ட அப்பாவு அவர்களை எதிர்த்து, முதல் முறையாகத் களம் கண்ட தமிழக வெற்றிக் கழகத்தின் 'விசில்' சின்னத்தில் போட்டி யிட்ட இவரின் வெற்றி, புதிய மாற்றத்திற்கான தொடக்கமாகப் பார்க்கப்படுகிறது.



டாக்டர் சதீஷ் கிரிஸ்டோபர் 11,386 வாக்குகள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றுள்ளார்.

**அமைச்சராகும் வாய்ப்பு?**

MBBS, DNB போன்ற உயரிய மருத்துவப் பட்டங்களைப் பெற்ற இவர், ஏற்கனவே தனது தொகுதியில் பல்வேறு மருத்துவ முகாம்களை நடத்தி மக்கள் மனதில் இடம் பிடித்தவர்.

இதன் காரணமாக, அமையவுள்ள புதிய அமைச்சரவையில் இவருக்கு மருத்துவத் துறை அமைச்சர் பொறுப்பு வழங்கப்படலாம் என்ற பேச்சு பலமாக அடிபடுகிறது.

**மக்களின் எதிர்பார்ப்பு:**

"போதைப்பொருள் இல்லா தமிழ்நாடு" மற்றும் கல்வி, வேலைவாய்ப்பு குறித்த தனது கட்சியின் கொள்கைகளை இராதாபுரத்தில் இவர் முன்மாதிரியாகச் செயல்படுத்துவார் எனத் தொகுதி மக்கள் பெரிதும் நம்புகின்றனர்.

சக்கர வியூகம்:

"என் நெஞ்சில் குடியிருக்கும் வாக்காளர் பெருமக்களே" எனத் தொடங்கி, ஒரு ஜாம்பவானையே வீழ்த்திய இந்த இளம் மருத்துவரின் அரசியல் பயணம், தமிழக அரசியலில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதும் என்பதில் ஐயமில்லை.

# மதுரையின் 4 தொகுதிகளில் தவெக சார்பில் வெற்றி பெற்ற 'திடீர்' வேட்பாளர்கள்!

மதுரை: மே.6-

மதுரை மாவட்டத்தில் மதுரை கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, மத்தி, மேலூர், திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி, சோழவந்தான் (தனி) ஆகிய 10 தொகுதிகள் உள்ளன. இதில் தவெக சார்பில் 10 தொகுதிகளில் வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.




இதில் மதுரை தெற்கு தொகுதியில் தவெக வேட்பாளராக பீட்டர் ஜோ என்பவர் அறிவிக்கப்பட்டார். அத்தொகுதியில் சவுராஷ்டிரா சமூகத்தினர் அதிகமாக உள்ளதால், அச்சமூகத்தைச் சேர்ந்தவர்களை நியமிக்க வேண்டும் என அக்கட்சி தலைமை யிடம் வலியுறுத்தப்பட்டது.

அதன்படி சவுராஷ்டிரா சமூகத்தைச் சேர்ந்த கோபிசன் அறிவிக்கப்பட்டார். அதே சமூகத்தைச் சேர்ந்தவர் நாதக சார்பில் போட்டியிட்ட நிலையிலும் தவெக வேட்பாளர் கோபிசன் வெற்றி பெற்றார்.

சோழவந்தான் (தனி) தொகுதியில் அதிமுக முன்னாள் எம்எல்ஏ கருப்பையா, அதிமுக சார்பில் வாய்ப்பு கேட்டார். ஆனால் அக்கட்சி சார்பில் முன்னாள் எம்எல்ஏ மாணிக்கம் அறிவிக்கப்பட்டார். இதனால் அதிமுகவில் வாய்ப்பு கிடைக்காத ஏமாற்றத்தில் கருப்பையா தவெகவில் சேர்ந்து திடீர் வேட்பாளரானார்.

அவர் தற்போது சோழவந்தான் தொகுதியில் வெற்றிபெற்றுள்ளார். தற்போதைய திமுக வேட்பாளர் வெங்கடேசனை தோற் கடித்துள்ளார். அதேபோல், திருப்பரங்குன்றம் திமுக முன்னாள் ஒன்றியச் செயலாளரும், அழகிரி ஆதரவாளருமான கார்த்தி கேயன், தவெகவில் சேர்ந்த வுடன் மதுரை கிழக்கு தொகுதி தவெக வேட்பாளரானார்.

இதில் அமைச்சர் பி.மூர்த்தியை எதிர்த்து களம் கண்டார். இங்கு அதிமுக வேட்பாளராக மாங்குளம் மகேந்திரன் போட்டி யிட்டார். இதில் தவெக வேட்பாளர் கார்த்திகேயன் வெற்றி பெற்றுள்ளார்.

மதுரை மத்திய தொகுதி தவெக வேட்பாளர் மதார் பதூருதீன் என்ற முஸ்தபாவின் சொந்த ஊர் தேனி மாவட்டம் உத்தமபாளையம். ஆனால் சென்னையில் வசித்து வருகிறார். விஜய் ரசிகரான இவர், தவெக கட்சி ஆரம்பித்ததிலிருந்து சமூக வலைதளங்கள், டிவி விவாத நிகழ்ச்சிகளில் தவெகவுக்கு ஆதரவாக பேசி வந்தார்.

இதனால் மதுரை மத்திய தொகுதியில் தவெக திடீர் வேட்பாளரானார். இந்நிலையில் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், அதிமுக வேட்பாளர் திரைப்பட இயக்குநர் சுந்தர்.சி ஆகியோரை எதிர்த்து போட்டி யிட்டு தற்போது வெற்றி பெற்றுள்ளார்.

## முடிவுக்கு வருமா 'ஜனநாயகன்' வெளியீட்டு சர்ச்சை?



சென்னை மே 06-
'ஜனநாயகன்' வெளியீட்டு சர்ச்சை முடிவுக்கு வருமா என்று விநியோகஸ்தர்கள் ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஹெச்.வினோத் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள படம் 'ஜனநாயகன்'. ஜனவரி 9ம் தேதி வெளியீட்டுக்கு திட்டமிடப்பட்ட இப்படம் தணிக்கை பிரச்சினையில் சிக்கியது. இதனால் இப்போது வரை தணிக்கை சான்றிதழ் கிடைக்காமல், வெளியீட்டு தேதி முடிவு செய்யப்படாமல் உள்ளது. மேலும், சில தினங்களுக்கு முன்பு இப்படம் இணையத்தில் வெளியாகி படக்குழுவினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

தற்போது தமிழக தேர்தலில் வெற்றி பெற்று முதல்வராக பொறுப்பேற்க உள்ளார் தவெக தலைவர் விஜய். இதனை முன்வைத்து 'ஜனநாயகன்' தணிக்கை சர்ச்சை முடிவுக்கு வரும் என விநியோகஸ்தர்கள் எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஏனென்றால் முன்பணம் கொடுத்து நீண்ட மாதங்கள் ஆவதால், சீக்கிரம் வெளியிட்டு ஆக வேண்டிய சூழலுக்கு தயாரிப்பு நிறுவனம் தள்ளப்பட்டுள்ளது. இதனிடையே, தமிழக முதல்வராக விஜய் பதவியேற்க இருப்பதால் 'ஜனநாயகன்' படத்துக்கு பெரியளவில் வசூல் இருக்கும் எனவும் விநியோகஸ்தர்கள் கணித்துள்ளனர். முன்னதாக இணையத்தில் வெளியானாலும், தற்போதுள்ள சூழலில் அது வசூலில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் கருதுகிறார்கள்.

## தவெக ஆட்சி அமைக்க இன்னும் 10 சீட் தேவை விஜய்க்கு ஆதரவு அளிக்கப் போவது யார்?



சென்னை: மே 06-
தமிழகத்தில் தொங்கு சட்டப்பேரவை அமையும் சூழல் உருவாகியுள்ள நிலையில், தமிழகத்தின் பல்வேறு கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களது ஆதரவைப் பெற விஜய் திட்டமிட்டுள்ளார்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், விஜய்யின் தவெக 108 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. எனினும், ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை பலமான 118 இடங்களைப் பெறாததால், தமிழகத்தில் தற்போது 'தொங்கு சட்டப்பேரவை' அமையும் சூழல் உருவாகியுள்ளது.ஆட்சி அமைக்க இன்னும் 10 இடங்கள் தேவைப்படுவதால், கட்சிகளிடம் ஆதரவு கோருவது குறித்து கட்சி நிர்வாகிகளுடன் விஜய் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார்.தற்போது தவெக முன்பு இரண்டு வாய்ப்புகள் உள்ளன. ஒன்று, அதிமுகவின் ஆதரவைக் கோருவது. மற்றொன்று, திமுக கூட்டணிக் கட்சிகளின் ஆதரவை கோருவது.அதிமுக தலைமையிலான கூட்டணி 53 இடங்களை கைப்பற்றியுள்ளது. ஒருவேளை அதிமுக ஆதரவு அளித்தால் தவெக மிக எளிதாக ஆட்சி அமைக்க முடியும். ஆனால், பிரச்சாரத்தின் போது அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமியை விஜய் கடுமையாக விமர்சித்துப் பேசினார். இந்தச் சூழலில், தற்போது பழனிசாமி ஆதரவு அளிப்பாரா என்பது தெரியவில்லை.

மற்றொருபுறம், திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ், விசிக மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவைப் பெறவும் விஜய் திட்டமிட்டு வருகிறார்.இதற்கிடையே, தவெகவின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்துள்ள காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, தொலைபேசி வாயிலாக விஜய்யைத் தொடர்பு கொண்டு தனது ஆதரவை தெரிவித்துள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.காங்கிரஸ் மட்டுமின்றி, திமுக கூட்டணியில் உள்ள விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் மற்றும் அதிமுக கூட்டணியில் உள்ள பாமக ஆகியவற்றுடனும் பேச்சுவார்த்தை நடத்த தவெக திட்டமிட்டுள்ளது. பாமக தரப்பில் இருந்து இது வரை சாதகமான பதில் வராததால், திருமாவளவன் தலைமையிலான விசிகவுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கவும் விஜய் தரப்பு ஆர்வம் காட்டி வருகிறது.தேர்தலுக்கு முன்பு, கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் நடந்து வந்த நிலையில், கூட்டணிக் கட்சிகளுக்கு 'ஆட்சியிலும் அதிகாரத்திலும் பங்கு' என்று விஜய் கூறிவந்தார். அந்த எதிர்பார்ப்புடன் விஜய்க்கு ஆதரவு அளிக்கப்போவது யார் என்பது விரைவில் தெரிந்துவிடும்.

## பழநி அருகே கோயில் திருவிழாவில் பக்தர்களுக்கு 'கறி விருந்து'



பழநி::மே 06-
திண்டுக்கல் மாவட்டம் பழநி அருகே கோம்பைபட்டியில் பெரியதுரை மற்றும் கருப்பணசுவாமி கோயில் திருவிழாவில் பக்தர்கள் காணிக்கையாக வழங்கிய 300 ஆடுகளை சமைத்து இன்று (செவ்வாய்கிழமை) 10,000 பேருக்கு 'கறி விருந்து' நடைபெற்று வருகிறது. பழநி அருகேயுள்ள கோம்பைபட்டியில் பெரியதுரை, கருப்பணசுவாமி, செல்வ விநாயகர், தன்னாசியப்பன், பொலக்கருப்பு கோயில் திருவிழா ஆண்டுதோறும் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு திருவிழா நேற்று (மே 4) தொடங்கியது.

நேற்று மாலை 6 மணிக்கு தீர்த்தக் கலசம், குதிரை மற்றும் கருப்பணசுவாமி சிலை ஊர்வலமாக கோயிலுக்கு கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து, இரவு 7 மணிக்கு தீர்த்தம் செலுத்துதல் மற்றும் அன்னதானம் நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வாக இன்று (மே 5) கருப்பணசுவாமிக்கு கிடா வெட்டுதல் நிகழ்வு நடைபெற்றது.தையொட்டி, அதிகாலை 3 மணி முதல் பக்தர்கள் ஆடு, அரிசி, பால் உள்ளிட்டவற்றை காணிக்கையாக செலுத்தினர். மொத்தம் 300 ஆடுகள் பக்தர்களிடம் இருந்து காணிக்கையாக பெறப்பெற்றன. பின்னர் இவற்றைக் கொண்டு உணவு சமைக்கும் பணி கோயில் வளாகத்திலேயே நடைபெற்று வருகிறது.

சமைக்ஷயலுக்கு தேவையான பொருட்களை வழங்கியதோடு, சமையல் செய்யும் பணியில் பக்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர். காலை 11 மணிக்கு முதல் மெகா 'கறி விருந்து' தொடங்கி நடைபெற்று வருகிறது. இதையொட்டி, சுற்று வட்டார கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் இதில் பங்கேற்றனர். மொத்தம் 10,000 பக்தர்களுக்கு விருந்து தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான, ஏற்பாடுகளை கிராமத்தினர் செய்திருந்தனர்.



## மேற்கு வங்கத்தில் 2011ல் பூஜ்ஜியம் 2026ல் பாஜக ராஜ்ஜியம்

கொல்கத்தா: மே 06-
கடந்த 2011ம் ஆண்டு மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் திரிணமூல் காங்கிரஸ் 184 தொகுதிகளைக் கைப்பற்றி முதல்முறையாக ஆட்சி அமைத்தது. அப்போது காங்கிரஸ் 40 தொகுதிகள், கம்யூனிஸ்ட் கட்சிகள் 40 தொகுதிகள், இதர கட்சிகள் 28 தொகுதிகளைக் கைப்பற்றின. பாஜகவுக்கு ஓரிடம் கூட கிடைக்கவில்லை.கடந்த 2016ம் ஆண்டு மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் திரிணமூல் காங்கிரஸ் 211 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்தது. அப்போது காங்கிரஸுக்கு 44, இடதுசாரி கட்சிகளுக்கு 26, இதர கட்சிகளுக்கு 10 இடங்கள் கிடைத்தன. பாஜக 3 தொகுதிகளில் மட்டும் வெற்றி பெற்றது.

கடந்த 2019ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது மேற்குவங்கத்தில் மொத்தமுள்ள 42 தொகுதிகளில் திரிணமூல் 22 தொகுதிகளில் வெற்றி பெற்றது. பாஜக 18 தொகுதிகளைக் கைப்பற்றி ஆளும் கட்சிஇதைத் தொடர்ந்து கடந்த 2021ம் ஆண்டு மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் திரிணமூல் காங்கிரஸ் 215 தொகுதிகளில் வெற்றி பெற்று 3வது முறையாக ஆட்சி அமைத்தது. பாஜக 77 பேரவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றது.

தற்போதைய சட்டப்பேரவைத் தேர்தலில் 207 சட்டப்பேரவைத் தொகுதிகளைக் கைப்பற்றி பாஜக அபார வெற்றி பெற்றிருக்கிறது. திரிணமூல் காங்கிரஸுக்கு 80 இடங்கள் மட்டுமே கிடைத்திருக்கிறது. காங்கிரஸுக்கு 2, மார்க்சிஸ்ட் கட்சிக்கு ஓரிடம் மட்டுமே கிடைத்துள்ளது. முதல் முறையாக மேற்கு வங்கத்தில் பாஜக ஆட்சி அமைக்கிறது

## 'முதல் தேர்தலிலேயே சிறப்பான செயல்பாடு' தவெகவுக்கு தமிழக பாஜக தலைவர் பாராட்டு

சென்னை:மே 06-
'போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தியதற்கு தமிழக வெற்றிக் கழகத்துக்கு என் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்' என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், '2026 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு உறுதுணையாக இருந்து ஆதரவு வழங்கிய தமிழக மக்களுக்கும், கூட்டணியின் வெற்றிக்காக அயராது பாடுபட்ட அனைத்து தோழமைக் கட்சி தொண்டர்களுக்கும், மேலும் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட நம் தமிழக பாஜகவின் அனைத்து காரியக்கர்த்தாக்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தேர்தலில், வரலாறு காணாத அளவில் இளைஞர்கள், பெண்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் உற்சாகத்துடன் தன்னார்வமாக வந்து வாக்களித்து, ஜனநாயகத்தின் மீதான தங்கள் உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர். இதற்காக அவர்களுக்கு என் இதயம் கனிந்த பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தாங்கள் போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தியதற்கு தமிழக வெற்றிக் கழகத்துக்கு என் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

## முதலமைச்சர் பதவியை நான் ராஜினாமா செய்ய மாட்டேன்: மம்தா பானர்ஜி திட்டவட்டம்




கொல்கத்தா:மே 06-
முதலமைச்சர் பதவியை நான் ராஜினாமா செய்ய மாட்டேன் என மம்தா பானர்ஜி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். மேற்கு வங்க மாநிலத்தில் 294 தொகுதிகளுக்கான சட்டப்பேரவை தேர்தல் 2 கட்டங்களாக நடந்தது. 4வது முறையாக ஆட்சியை பிடிக்க திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், முதல்வருமான மம்தா பானர்ஜி மாநிலம் முழுவதும் சூறாவளி பிரசாரம் செய்தார். பாஜ முதல் முறையாக ஆட்சியை கைப்பற்ற பிரதமர் மோடி, அமித்ஷா, ராஜ்நாத் சிங் உள்ளிட்ட கட்சியின் மூத்த தலைவர்கள் மிகத்தீவிர பிரசாரம் மேற்கொண்டனர்.

இரு கட்சிகளுக்கு இடையே கடும் போட்டிக்கு மத்தியில், வாக்குப்பதிவில் வரலாறு காணாத வகையில் 92.17 சதவீத ஓட்டுகள் பதிவாகின. இதனிடையே நேற்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. பாஜ 207 தொகுதிகளை கைப்பற்றி அமோக வெற்றியுடன் முதல் முறையாக ஆட்சி அமைக்கிறது. ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் 80 இடங்களை கைப்பற்றி தோல்வி அடைந்தது. இந்நிலையில் இது தொடர்பாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய மம்தா பானர்ஜி; மேற்கு வங்கத்தில் மக்களாட்சி படுகொலை செய்யப்பட்டுள்ளது; மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் தோற்கவில்லை. மேற்கு வங்க தேர்தலில் ஒன்றிய பாஜக அரசு நேரடியாக இடையூறு செய்தது.

வாக்கு எண்ணிக்கை மிகவும் அநீதியான முறையில் நடந்துள்ளது. நிஜ வில்லன் தேர்தல் ஆணையம்தான். பாஜக மட்டுமின்றி தேர்தல் ஆணையத்துக்கு எதிராகவும் நாங்கள் போராடினோம். நீதிமன்றம் கூட எங்களுக்கு நீதி வழங்கவில்லை. மேற்கு வங்கத்தில் தேர்தல் நடத்தப்பட்டவிதம் ஜனநாயகத்துக்கு விடப்பட்ட சவாலாகும். முதலமைச்சர் பதவியை நான் ராஜினாமா செய்ய மாட்டேன் என்று கூறினார்

## 'விஜய் வெற்றியை கணித்தபோது ஏளனம் செய்தனர்' ஆக்ஸிஸ் மை இந்தியா பிரதீப் குப்தா ஆதங்கம்




புதுடெல்லி:மே 06-
தமிழக அரசியல் களத்தில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில், பிரபல தேர்தல் கணிப்பு நிறுவனமான 'ஆக்ஸிஸ் மை இந்தியா' அமைப்பின் தலைவர் பிரதீப் குப்தா என்டிடிவி ஊடகத்திற்குப் பேட்டியளித்தார். அப்போது, தங்களது நிறுவனத்தின் கணிப்புகள் குறித்து அவர் கூறியதாவது:தமிழகத் தேர்தலில் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும், அவர் வெற்றியை நோக்கி நகருவார் என்றும் நாங்கள் கணிப்புகளை வெளியிட்டோம். ஆனால், ஆரம்பத்தில் எங்களுடைய இந்தத் துணிச்சலான கணிப்பைக் கண்டு அரசியல் விமர்சகர்களும், மற்றவர்களும் எங்களை நோக்கிச் சிரித்தார்கள். எங்களை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் கேலி செய்தார்கள், ஆனால், எதிர்ப்புகளையும் விமர்சனங்களையும் கண்டு நாங்கள் பின்வாங்கவில்லை.தரவுகளின் அடிப்படையில் மக்கள் மனநிலையை நாங்கள் துல்லியமாக ஆய்வு செய்தோம். இன்று தேர்தல் முடிவுகள் வெளியான நிலையில், மக்கள் எங்கள் கணிப்புக்கு ஆதரவாகத்தான் வாக்களித்துள்ளனர் என்பது உறுதியாகியுள்ளது.

எங்களை எள்ளி நகையாடியவர்கள் இப்போது மவுனமாகி விட்டனர். தமிழகத்தில் ஒரு புதிய அரசியல் சக்தியின் வருகையைத் எங்களது நிறுவனம் முன்கூட்டியே உணர்ந்திருந்தது. அது இப்போது உண்மையாகியுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பவானிபூரில் மம்தா பானர்ஜி அதிர்ச்சி தோல்வி

பவானிபூர் மே 06-
பவானிபூர் தொகுதி வாக்கு எண்ணிக்கையின்போது முதல்வர் மம்தா, பாஜக மூத்த தலைவர் சுவேந்து அதிகாரி இடையே கடும் போட்டி நிலவியது.

பிற்பகல் நிலவரப்படி சுமார் 7,000 வாக்குகள் வித்தியாசத்தில் மம்தா முன்னிலையில் இருந்தார். இந்த வித்தியாசம் படிப்படியாக குறைந்து கொண்டே வந்தது. இரவு 7.30 மணி நேர நிலவரப்படி இருவருக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் 2,000 ஆக குறைந்தது.

முதல்வர் மம்தாவும், சுவேந்து அதிகாரியும் வாக்கு எண்ணும் மையத்தில் அமர்ந்திருந்தனர். 16வது சுற்று வாக்கு எண்ணிக்கையின்போது பாஜகவுக்கு ஆதரவாக முறைகேடு நடப்பதால் திரிணமூல் முகவர்கள் குற்றம் சாட்டினர். அப்போது வாக்குச்சாவடி மைய அதிகாரி சுர்ஜனானி பஞ்சாபி மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அவரது சட்டை கிழிந்தது. இதன் காரணமாக வாக்கு எண்ணிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

சிறிது நேரத்துக்குப் பிறகு மீண்டும் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. இறுதியில் சுவேந்து அதிகாரி 15,105 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அப்போது முதல்வர் மம்தா, வாக்கு எண்ணும் மையத்தில் இருந்து வெளியேறினார். வாக்கு திருட்டு நடைபெறுவதாக கோஷம் எழுப்பியபடி அவர் வெளியேறிச் சென்றார்.



## சேப்பாக்கத்தில் குறைந்த வாக்குகள் பெற்று டெபாசிட் இழந்தது அதிமுக

சென்னை:மே 06-
உதயநிதி ஸ்டாலின் போட்டியிட்ட சேப்பாக்கம் தொகுதியில் குறைந்த வாக்குகள் பெற்று அதிமுக டெபாசிட் இழந்துள்ளது. சேப்பாக்கம் தொகுதியில் அதிமுகவின் ஆதி ராஜாராம் 16,507 வாக்குகள் மட்டும் பெற்று டெபாசிட் இழந்தார்

## அனைத்து குழந்தைகளுக்கும் நீரிழிவு நோய் பரிசோதனை: வாழ்நாள் சிகிச்சை அளிக்க மத்திய அரசு திட்டம்



புதுடெல்லி: மே 06-
இளம் வயதினர் இடையே நீரிழிவு நோய் அதிகரித்து வருகிறது. இதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு தனது முதன்மை திட்டமான ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்தய காரியக்ரம் (ஆர்பிஎஸ்கே) திட்டத்தை விரிவுபடுத்துகிறது.இதன்மூலம் பிறப்பு முதல் 18 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் நீரிழிவு நோய் பரிசோதனை செய்து, வாழ்நாள் முழுவதும் இலவச சிகிச்சை வழங்க உள்ளது. தேசிய பொது சுகாதார மாநாட்டில் மத்திய சுகாதார அமைச்சகத்தால் ஒரு வழிகாட்டு ஆவணம் வெளியிடப்பட்டது. இதில் குழந்தைப் பருவ நீரிழிவு நோய்க்கான பரிசோதனை, நோயறிதல், சிகிச்சை மற்றும் நீண்ட கால மேலாண்மை ஆகியவற்றுக்காக ஒரு தேசிய கட்டமைப்பு வகுக்கப்பட்டுள்ளது.இது, சமூகம் மற்றும் பள்ளி அளவிலான பரிசோதனைகளை மாவட்ட அளவிலான பராமரிப்புடன் ஒருங்கிணைத்து, நோயை முன்கூட்டியே கண்டறிவதையும் தொடர் சிகிச்சையை உறுதி செய்வதையும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த திட்டம், மத்திய அரசின் மறுசீரமைக்கப்பட்ட ஆர்பிஎஸ்கே 2.0 திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இந்த வழிகாட்டுதல்கள், மோசமான உணவுப் பழக்கம், குறைந்து வரும் உடல் சார்ந்த செயல்பாடுகள், அதிக திரைப் பயன்பாடு உள்ளிட்ட அதிகரித்து வரும் வாழ்க்கை முறை அபாயங்களையும் சுட்டிக்காட்டு கின்றன. மேலும், தொடர் சிகிச்சையை வலுப்படுத்த, டிஜிட்டல் முறையிலான கண்காணிப்பு கட்டமைக்கப்பட்ட பின்தொடர்தல் முறைகளையும் அறிமுகப்படுத்துகின்றன. இந்த திட்டத்தின் கீழ் நடமாடும் சுகாதாரக் குழுக்கள், பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகளை பரிசோதனை செய்யும்

## தவெகவின் இமாலய வெற்றி! சேலம் மாவட்ட வேட்பாளர்களுக்கு தேசிய தெலுங்கர் சமூக கூட்டமைப்பு பாராட்டு



சேலம் மே 06-

தமிழக சட்டமன்றத் தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் மற்றும் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் அனைவருக்கும், தேசிய தெலுங்கர் சமூக கூட்டமைப்பின் மாநில தலைவர் நாகா ஆர்.அரவிந்தன் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். புதிதாக ஆட்சி அமைக்கவுள்ள விஜய், மக்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிச் சிறப்பான ஆட்சியைத் தர வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார். குறிப்பாக சேலம் தெற்கு வேட்பாளர் தமிழன் பார்த்திபன், வடக்கு வேட்பாளர் சிவக்குமார், மற்றும் மேற்கு வேட்பாளர் லட்சுமணன் ஆகியோரை நேரில் சந்தித்து அவர் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டார். நாகா ஆர்.அரவிந்தன் (மாநில தலைவர், தேசிய தெலுங்கர் சமூக கூட்டமைப்பு), கேசவன் (மாநில அமைப்பாளர்), ஹரி சுந்தர் (இளைஞரணி அமைப்பாளர்), விஜய் (தலைவர், தவெக வாழ்த்துப் பெற்றவர்), தமிழன் பார்த்திபன், சிவக்குமார், லட்சுமணன் (வெற்றி பெற்ற சேலம் மாவட்டதவெக வேட்பாளர்கள்)



## கம்யூனிசத்தின் தந்தைக்கு வீரவணக்கம்! சேலத்தில் காரல் மார்க்ஸ் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

சேலம் மே 06-

கம்யூனிசத்தின் தந்தை எனப் போற்றப்படும் தத்துவப் பேராசான் மாமேதை காரல் மார்க்ஸ் அவர்களின் 209 வது பிறந்த தின விழா சேலத்தில் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.சேலம் இராமகிருஷ்ணா பூங்கா அருகில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சி அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள காரல் மார்க்ஸ் திருவுருவச் சிலைக்கு, அவரது பிறந்த நாளை முன்னிட்டு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சேலம் வரலாற்றுச் சங்கத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாகக் கலந்துகொண்டனர், தலைவர்: தாரை குமரவேல், பொதுச் செயலாளர்: ஜே. பர்னபாஸ், செயற்குழு உறுப்பினர்கள்: பாபு சாணவாஸ்கான், ரூபன் சீனிவாசன், கோகுலகண்ணன், அறம் சுதர்சன், தீனதயாளன், பால்ராஜ், புகழேந்தி, பேராசிரியர் கவிதா, டாக்டர் கர்லிங் ஈபி ஆகியோர் கலந்துகொண்டனர். இவர்களுடன் நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டு உலகப் புகழ்பெற்ற இந்தத் தத்துவஞானிக்குத் தங்களது மரியாதையைச் செலுத்தினர்.

## திருவெறும்பூர் தொகுதியில் அமைச்சர் அன்பில் மகேஸை வீழ்த்தி பகை தீர்த்த தவெக நவல்பட்டு விஜி

திருச்சி: மே 06-

திருவெறும்பூர் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்ட அமைச்சர் அன்பில் மகேஸை எதிர்த்து போட்டியிட்ட தவெக வேட்பாளர் நவல்பட்டு விஜி வெற்றி பெற்றார்.திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தொகுதியில் திமுக சார்பில் அமைச்சர் அன்பில் மகேஸ், அதிமுக சார்பில் தெற்கு மாவட்டச் செயலாளர் ப.குமார், தவெக சார்பில் நவல்பட்டு விஜி, நாதக சார்பில் டி.ராஜேஷ் உட்பட மொத்தம் 26 பேர் போட்டியிட்டனர்.இந்நிலையில், வாக்கு எண்ணிக்கை நேற்று நடைபெற்றதில்,



முதல் 2 சுற்றுகள் தவெகவின் நவல்பட்டு விஜி முன்னிலையில் இருந்தார். அமைச்சர் மகேஸ் 3, 6வது சுற்றுகளில் மட்டுமே முன்னிலை வகித்தார். மற்ற அனைத்து சுற்றுகளிலும் நவல்பட்டு விஜி முன்னிலை வகித்தார்.

மொத்தம் 24 சுற்று வாக்கு எண்ணிக்கையின்படி, தவெகவின் நவல்பட்டு விஜி 89,837 வாக்குகள் பெற்று தனக்கு அடுத்தபடியாக வந்த அமைச்சர் அன்பில் மகேஸை 8,705 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்.அமைச்சர் அன்பில் மகேஸ் 81,132 வாக்குகளும், அதிமுக ப.குமார் 29,473 வாக்குகளும், நாதக டி.ராஜேஷ் 9,311 வாக்குகளும் பெற்றனர்.

2021ல் அன்பில் மகேஸ் 1,05,424 வாக்குகள் பெற்று தன்னை எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் ப.குமாரை (55,727) விட 49,697 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அமைச்சர் கே.என். நேருவின் தீவிர விசுவாசியாக இருந்த நவல்பட்டு விஜி, திமுக மாநில பொதுக்குழு உறுப்பினர், ஒன்றியச் செயலாளர் பொறுப்புகளை வகித்தவர். 10 ஆண்டுகளுக்கு முன்பு திருவெறும்பூர் தொகுதிக்கு அன்பில் மகேஸின் வருகையால் இவருக்கு முக்கியத்துவம் குறையத்தொடங்கியது.

மேலும் அன்பில் மகேஸ் ஆதரவாளர்களால் விஜி ஓரங்கட்டப்பட்டார். இந்நிலையில் தவெகவில் கடந்த சில மாதங்களுக்கு முன் இணைந்து, திருவெறும்பூர் தொகுதியில் போட்டியிட்டு வென்று அன்பில் மகேஸை தோற்கடித்து தனது அரசியல் பகையை தீர்த்துக் கொண்டார்.

## புதுச்சேரி - என்ஆர்.காங்கிரஸ் சட்டப்பேரவை கட்சித் தலைவராக ரங்கசாமி மீண்டும் தேர்வு

புதுச்சேரி: மே 06-

நள்ளிரவில் நடந்த எம்எல்ஏக்கள் கூட்டத்தில் என்.ஆர்.காங்கிரஸ் சட்டப்பேரவைத் தலைவராக ரங்கசாமியை மீண்டும் தேர்வு செய்தனர். அமைச்சர்கள் யார், யார் என விரைவில் முடிவு எடுக்கவுள்ளதாக கூறப்படுகிறது.புதுவை சட்டப்பேரவைத் தேர்தலில் என்டிஏ கூட்டணி 18 இடங்களை கைப்பற்றி மீண்டும் ஆட்சியமைக்கிறது. இத்தேர்தலில் என்.ஆர். காங்கிரஸ் 12 தொகுகளில் வென்றுள்ளது. அதையடுத்து போட்டியில் வெற்றி பெற்ற வேட்பாளர் அனைவரும் முதல்வரும் என்.ஆர்.காங்கிரஸ் கட்சி நிறுவனருமான ரங்கசாமியை நேரில் சந்தித்து ஆசி பெற்றனர்.தொடர்ந்து,



முதல்வர் ரங்கசாமி தலைமையில் நேற்று நள்ளிரவில் காமராஜர் சாலையில் உள்ள ஹோட்டலில் என்.ஆர். காங்கிரஸ் எம்எல்ஏக்கள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்கேற்ற எம்எல்ஏக்கள் முதல்வர் ரங்கசாமியை என்ஆர்காங்கிரஸ் சட்டப்பேரவை கட்சித் தலைவராக ஒருமனதாக தேர்வு செய்துள்ளனர். இதற்கான கடிதத்தில் எம்எல்ஏக்கள் கையெழுத்திட்டனர். என்டிஏ கூட்டணியில் முதல்வர் வேட்பாளர் ரங்கசாமிதான் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.மேலும், புதுச்சேரியில் யார் யாருக்கு அமைச்சர் பதவிகள், கூட்டணிக் கட்சிகளுக்கு எத்தனை அமைச்சர் பதவிகள் என்பதை முதல்வர் ரங்கசாமி முடிவு எடுக்கவுள்ளதாக தெரிகிறது. இதனிடையே, விரைவில் துணை நிலை ஆளுநர் கைலாஷ் நாதனை சந்திக்கவுள்ளதாக ரங்கசாமி தெரிவித்துள்ளார்.





## தவெக தலைவர் விஜய்க்கு பவன், லோகேஷ் வாழ்த்து

விஜயவாடா:மே 06-

தமிழக சட்டப்பேரவை தேர்தல் விஜய் தலைமையிலான தவெக வெற்றி பெற்றுள்ளது.

இது குறித்து ஆந்திர துணை முதல்வரும் ஜனசேனா கட்சித் தலைவருமான பவன் கல்யாண் வெளியிட்டுள்ள செய்தியில், ''தமிழ்நாட்டில் விஜய் பெரும்பான்மையான மக்களின் மனதை வென்று, வெற்றிக் கனியை பறித்துள்ளார். கட்சியை தொடங்கிய சிறிது காலத்திலேயே மாபெரும் வெற்றியை ருசித்த விஜய்யை நான் மனதார வாழ்த்துகிறேன்'' என்று கூறியுள்ளார்.

ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் மகனும், கல்வி அமைச்சருமான லோகேஷ் தனது சமூக வலைதளப் பதிவில், ''விஜய் அரசியல் அரங்கேற்றமே அதிரடியாக உள்ளது. தமிழகத்தில் இளைய சமுதாய வாக்காளர்களின் ஒட்டுமொத்த வெற்றி இது. பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, பொறுப்புகள், கடமைகளுடன் வெற்றி நடை போட தவெக தலைவர் விஜய்க்கு எனது வாழ்த்துகள்'' என்று கூறியுள்ளார்.

ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி, ''பொது வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தை வெற்றிகரமாக தொடங்கியுள்ள சகோதரர் விஜய்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்'' என்றார்.

## “மக்கள் நலன், மாநில முன்னேற்றத்துக்காக விஜய் செயல்படுவார்” செல்வப்பெருந்தகை நம்பிக்கை

சென்னை: மே 06-

“மக்களின் தீர்ப்பு எங்கள் வழிகாட்டி; மக்களின் நலன் எங்கள் உயர்ந்த கடமை. இந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய், மக்கள் நலனையும் மாநில முன்னேற்றத்தையும் முன்னிலைப்படுத்தி செயல்படுவார் என்ற நம்பிக்கை உள்ளது” என தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘தமிழ்நாடு மக்களின் ஜனநாயகத் தீர்ப்பை முழு மரியாதையுடன் ஏற்றுக்கொள்கிறோம். இந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய்க்கு மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரி



வித்துக் கொள்கிறேன். மக்கள் நலனையும் மாநில முன்னேற்றத்தையும் முன்னிலைபடுத்தி அவர்கள் செயல்படுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் தொகுதியில் முழு அர்ப்பணிப்புடன் உழைத்த தோழமைக்கட்சித் தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

தமிழ்நாடு முழுவதும் நமது கூட்டணி வெற்றிக்காக ஒன்றுபட்டு உழைத்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இணைந்த அனைத்து தோழமைக்கட்சிகளுக்கும், மேலும் தமிழ்நாடு முழுவதும் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட காங்கிரஸ் உறவுகளுக்கும் என் நன்றிகள். மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் பாதையில், சமூக நீதி மற்றும் ஜனநாயகப் பாதுகாப்பை உறுதியாக நிலைநிறுத்த தொடர்ந்து செயல்படுவோம். மக்களின் தீர்ப்பு எங்கள் வழிகாட்டி; மக்களின் நலன் எங்கள் உயர்ந்த கடமை.” எனத் தெரிவித்துள்ளார்.

## இரட்டை இன்ஜின் ஆட்சிக்கு கிடைத்த மகத்தான அங்கீகாரம்: மோடிக்கு புதுச்சேரி முதல்வர் கடிதம்

புதுச்சேரி:மே 06-

புதுச்சேரியில் என்டிஏ வெற்றியானது இரட்டை இன்ஜின் ஆட்சிக்கு கிடைத்த மகத்தான அங்கீகாரம். உங்களின் வழிகாட்டுதலே மிகப்பெரிய பலம் என்று பிரதமர் மோடிக்கு முதல்வர் ரங்கசாமி கடிதம் அனுப்பியுள்ளார்.

புதுச்சேரியில் என்டிஏ கூட்டணி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியமைக்கிறது. என்டிஏ கூட்டணியின் தலைவரும் முதல்வருமான ரங்கசாமி பிரதமர் மோடிக்கு இன்று அனுப்பியுள்ள கடிதம்: புதுச்சேரி மக்கள் சார்பாக, உங்களின் அன்பான வார்த்தைகளுக்கும் தொடர்ச்சியான ஆதரவிற்கும் எனது மனமார்ந்த நன்றி.

இன்றைய வரலாற்றுச் சிறப்புமிக்க மக்கள் ஆணை, உங்களின் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமைக்கும், புதுச்சேரி



யூனியன் பிரதேசத்தை மாற்றியமைத்த 'இரட்டை இன்ஜின்' ஆட்சிக்கும் கிடைத்த ஒரு மகத்தான அங்கீகாரமாகும். புதுச்சேரி மக்கள் தீர்க்கமாகத் தீர்ப்பளித்துவிட்டனர் வளர்ச்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றில் என்.டி.ஏ. கூட்டணியின் சாதனைகள் மீது நம்பிக்கை வைத்த ஒவ்வொருவருக்கும் இந்த வெற்றி சொந்தமானது. உங்களின் தொடர்ச்சியான வழிகாட்டுதலே எங்களின் மிகப்பெரிய பலமாக இருந்தது. அதுவே, கடந்த ஐந்து ஆண்டுகளாக மக்கள் நலன் சார்ந்த நலத்திட்டங்களையும் குறிப்பிடத்தக்க உள்கட்டமைப்பு வளர்ச்சியையும் வழங்க எங்களுக்கு மிகவும் உதவியது.தொடர்ச்சியாக என்டிஏ அரசில் இரண்டாவது முறையாகப் பதவியேற்கும் இவ்வேளையில், நமது மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதிலும், வளர்ந்த இந்தியா குறித்த உங்களின் தொலைநோக்குப் பார்வைக்கு பங்களிக்கும் ஒரு 'விக்சித் புதுச்சேரியை' உருவாக்குவதிலும் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

உங்களின் மதிப்புமிக்க வழிகாட்டுதலின் கீழ் எங்களின் வளர்ச்சிப் பயணத்தைத் தொடர ஆவலுடன் காத்திருக்கிறோம். தங்களின் தலைமைத்துவத்திற்கும், புதுச்சேரி மக்களுக்கு எப்போதும் துணை நிற்பதற்கும் மீண்டும் ஒருமுறை நன்றி என்று தெரிவித்துள்ளார்.

## “ஒரு ரூபாய் கூட வழங்காமல் தவெக சரித்திர வெற்றி” செங்கோட்டையன் பெருமிதம்

கோவை:மே 06-

“வாக்காளர்களுக்கு ஒரு ரூபாய் கூட கொடுக்காமல் சரித்திர வெற்றியை தவெக பெற்றுள்ளது” என்று செங்கோட்டையன் பெருமிதமாக தெரிவித்தார்.



தமிழக வெற்றிக் கழக எம்எல்ஏக்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மேற்கு மண்டலத்தை சேர்ந்த எம்எல்ஏக்கள் பலர் கோவையில் இருந்து சென்னைக்கு புறப்பட்டனர். பீளமேடு விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கோபி தொகுதி எம்எல்ஏ செங்கோட்டையன் கூறியது:

“ஓர் இயக்கம் வளர வேண்டும் என்றால் தியாகம் செய்ய வேண்டும். அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா தியாகத்தால் வளர்ந்த இயக்கம் தற்போது தடுமாறிக் கொண்டிருக்கிறது.

மக்கள் சக்தியாக தற்போது தவெக மாறியிருக்கிறது. வாக்காளர்களுக்கு ஒரு ரூபாய் கூட வழங்காமல் முதல் தேர்தலில் சரித்திர வெற்றி பெற்றுள்ளோம். விஜய்யை மக்கள் நேசிக்கிறார்கள். நேசிக்கின்ற மக்களுக்கு அவர் உறுதுணையாக இருப்பார். உறுதியாக உயரிய பார்வை, மனிதநேயம் அவரிடத்தில் இருக்கிறது. அதனை நீங்கள் பார்ப்பீர்கள்” என்று கூறினார்.

## “திமுக கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியும் தவெகவுக்கு ஆதரவு கொடுக்காது” வைகோ நம்பிக்கை

சென்னை:மே 06-

“திமுக கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியும் தவெகவுக்கு ஒருபோதும் ஆதரவு கொடுக்க மாட்டார்கள் என்பது எனது திடமான கருத்தாகும்” என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்தார். சென்னை அறிவாலயத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, “இந்த தேர்தலில் திமுகவை விட தவெகவுக்கு அதிக இடங்களை கொடுத்த மக்கள் தீர்ப்பை மதிக்கிறோம். தவெக



ஆட்சியமைக்க இன்னும் 10 எம்எல்ஏக்கள் ஆதரவு தேவை. எங்களிடம் அவர்கள் ஆதரவு கேட்க வரவே மாட்டார்கள். நாங்கள் மிகவும் உறுதிப்பாட்டோடு திமுக கூட்டணியில் நீடிக்கிறோம்.

எங்கள் கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியோடும் தவெக தொடர்பு வைத்ததாக தெரியவில்லை, தொடர்பு வைக்கவும் முடியாது. இந்த கூட்டணியில் உள்ள யாரும் அசைகின்ற மனநிலையில் இல்லை.

மக்களின் தீர்ப்பு என்பது ஜனநாயகத்தில் மதிக்கப்பட வேண்டியது. திமுக ஆட்சியில் நடந்த அரும்பெரும் சாதனைகளை தொடர வேண்டிய கடமை புதிதாக அமையும் அரசுக்கு உள்ளது.திமுக கூட்டணியில் உள்ள எந்தக் கட்சியும் தவெகவுக்கு ஒருபோதும் ஆதரவு கொடுக்க மாட்டார்கள் என்பது எனது திடமான கருத்தாகும்” எனத் தெரிவித்துள்ளார்.


## “திமுக கூட்டணியில் தான் இருக்கிறோம்; அதில் மாற்றமில்லை” பிரேமலதா விஜயகாந்த்

சென்னை:மே 06-

நாங்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில்தான் இருக்கிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், விஜய்யின் தவெக 108 இடங்களைக் கைப்பற்றி இருக்கிறது. இருப்பினும், ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மை பலமான 118 இடங்களைப் பெறாததால், தமிழகத்தில் தற்போது ‘தொங்கு சட்டப்பேரவை’



அமையும் சூழல் உருவாகியுள்ளது. இந்நிலையில், ஆட்சி அமைக்க இன்னும் 10 இடங்கள் தேவைப்படுவதால், தேமுதிக, விசிக உள்ளிட்ட மற்ற கட்சிகளிடம் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்புள்ளது. இந்நிலையில், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா செய்தியாளர்களிடம் பேசும்போது, “புதிதாக வந்திருக்கும் விஜய்க்கு எனது வாழ்த்துகள். நாங்கள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில்தான் இருக்கிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை.விஜய் எங்கள் வீட்டு பிள்ளை. அவருக்கு வாழ்த்துகள். விஜய் எங்களுக்கு புதியவர் இல்லை. அவர் இப்போதுதான் அரசியலுக்கு வந்திருக்கிறார். மக்களுக்கு நல்லது செய்யப்பட்டும்” இவ்வாறு அவர் கூறினார்.



## விமானத்தில் பவர் பேங்க் வெடித்து தீ

சண்டிகர்:மே 06-

சண்டிகர் விமான நிலையத்தில் இண்டிகோ பயணிகள் விமானத்தில் பவர் பேங்க் வெடித்து தீப்பிடித்ததால் பரபரப்பு ஏற்பட்டது. சண்டிகரில் தரையிறங்கிய விமானத்தில் பவர் பேங்க் வெடித்து புகை சூழ்ந்ததால் பயணிகள் பத்திரமாக வெளியேற்ற பட்டனர். ஹைதராபாத்தில் இருந்து சண்டிகர் வந்த விமானத்தில் பவர் பேங்க் வெடித்தது குறித்து அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்



# சங்கரன்கோவிலில் அதிமுக 'சீற்றம்'! தவெக வேட்பாளரை வீழ்த்தி டாக்டர் திலீபன் ஜெய்சங்கர் வெற்றி

தென்காசி மே 06-

சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் மொத்தம் பதிவான 1,97,670 வாக்குகளில், அதிமுக வேட்பாளர் டாக்டர் திலீபன் ஜெய்சங்கர் 64,865 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இவரைத் தொடர்ந்து தவெக வேட்பாளர் ராமராஜன் 58,376 வாக்குகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்தார். காங்கிரஸ் வேட்பாளர் சங்கை கணேசன் மூன்றாம் இடத்தையும், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சுவிதா நான்காம் இடத்தையும் பிடித்தனர்.வேட்பாளர்கள் பெற்ற வாக்கு விவரம்: டாக்டர் திலீபன் ஜெய்சங்கர் (அதிமுக) 64,865ராமராஜன் (தவெக) 58,376, சங்கை கணேசன் (காங்கிரஸ்) 42,567, சுவிதா (நாம் தமிழர் கட்சி) 12,767, வசந்தி முருகேசன் (அ.இ.பு.த.ம.மு.க) 8,006, நோட்டா (NOTA) 560



# 26 சுற்றுப் பரபரப்பு! கடையநல்லூர் தொகுதியில் மதிமுக வேட்பாளர் ராஜேந்திரன் அபார வெற்றி

கடையநல்லூர் மே 06-

கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் திமுக கூட்டணியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட மதிமுக வேட்பாளர் ராஜேந்திரன், 6,253 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். மொத்தம் பதிவான 2,19,181 வாக்குகளில், 26 சுற்றுகள் முடிவில் ராஜேந்திரன் 79,832 வாக்குகளைப் பெற்று முதலிடம் பிடித்தார். இத்தொகுதியில் ஒருமுறை வெற்றி பெற்றவர் மீண்டும் வெற்றி பெற்றதில்லை என்ற வரலாற்றுச் சென்டிமென்ட்டை உடைக்க முயன்ற அதிமுக எம்எல்ஏ கிருஷ்ணமுரளி தோல்வியடைந்தார்.வேட்பாளர்கள் பெற்ற வாக்கு விவரம்: ராஜேந்திரன் (மதிமுக திமுக கூட்டணி) 79,832, கிருஷ்ண முரளி (அதிமுக) 73,579, அப்துல் ஜலீல் (தவெக ) 49,254, அபூபக்கர் சித்திக் (நாம் தமிழர்) 10,965, நோட்டா (NOTA) 527.



■ தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட திமுக வேட்பாளர் மனோஜ் பாண்டியன் தன்னை எதிர்த்து போட்டியிட்ட, அதிமுக வேட்பாளர் கேஆர்பி. பிரபாகரனை விட 7798 வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றார். இவருக்கு ஆலங்குளம் தேர்தல் நடத்தும் அலுவலர் ராமச்சந்திரன் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை வழங்கினார். இந்த தொகுதியில் மொத்தம் 12 பேர் போட்டியிட்டனர்.

# பி.டி.ஆர்ன் கோட்டையைத் தகர்த்த தவெக வேட்பாளர் முஸ்தப்பா வெற்றி

மதுரை மே 06-

தமிழக சட்டமன்றத் தேர்தல் 2026ன் ஒரு பகுதியாக கடந்த ஏப்ரல் 23ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. மதுரை மத்திய தொகுதிக்கு (எண்: 193) மதுரை கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த மையத்தில் வாக்குகள் எண்ணப்பட்டன.



*வாக்கு விவரங்கள்:*

இத்தொகுதியில் பதிவான மொத்த வாக்குகள் 1,48,709 ஆகும். விறுவிறுப்பாக நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையின் இறுதியில் வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் வருமாறு: முஸ்தப்பா (தவெக)- 63,414, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் (திமுக) - 44,286, சுந்தர்.சி. (புதிய நீதிக்கட்சி)- 33,538, அப்துல் ஹக்கீம் (நாம் தமிழர்) - 5,549

தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளர் முஸ்தப்பா, முன்னாள் அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் அவர்களை 19,128 வாக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி அபார வெற்றி பெற்றுள்ளார். இறுதிச் சுற்று முடிவுகளுக்குப் பிறகு, அவருக்குத் தேர்தல் பார்வையாளர்கள் அதிகாரப்பூர்வ வெற்றிச் சான்றிதழை வழங்கினார்கள்.

# புதிய சரித்திரம் படைத்த டி.சண்முகன்! மொடக்குறிச்சி தொகுதியை தட்டித்தூக்கிய தவெக

மொடக்குறிச்சி மே 06-

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் டி.சண்முகன், 59,978 வாக்குகள் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார். 'விசில்' சின்னத்தில் களம் கண்ட இவர், தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளரை விட 2,430 வாக்குகள் வித்தியாசத்தில்



இந்த வெற்றியைப் பதிவு செய்துள்ளார். இந்த வரலாற்றுச் சாதனையைத் தொடர்ந்து, அவருக்குப் பல்வேறு தரப்பினரும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

டி.சண்முகன் (வெற்றி பெற்ற தவெக வேட்பாளர்), எம்.ஞானசேகரன் (பாசூர் பேரூர் செயலாளர், தவெக வாழ்த்து தெரிவித்தவர்).

மொடக்குறிச்சியில சண்முகம் போட்ட 'விசில்'ல மத்த வேட்பாளர்கள் எல்லாம் மிரண்டு போயிருக்காங்க. குறைவான வித்தியாசமா இருந்தாலும், இது தவெகவோட பெரிய வெற்றிக்கான 'சக்கர வியூகம்'!

# 6,583 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வெற்றி! வாசுதேவநல்லூர் தொகுதியைத் தக்கவைத்த ராஜா எம்எல்ஏ

தென்காசி.மே 06-

தென்காசி மாவட்டத்தின் முக்கியத் தொகுதியான வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியின் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. மொத்தம் 1,90,256 வாக்குகள் பதிவான நிலையில், திமுக வேட்பாளர் ராஜா எம்எல்ஏ அவர்கள் மீண்டும் வெற்றி வாகை சூடியுள்ளார். தொடக்கம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையின் முடிவில், வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் பின்வருமாறு: திமுக (ராஜா எம்எல்ஏ): 63,045 வாக்குகள் (வெற்றி), பாஜக (ஆனந்தன் அய்யாசாமி): 56,462 வாக்குகள், தவெக (அமுதாராணி): 45,862 வாக்குகள், நாம் தமிழர் (இசை மதிவாணன்): 12,856 வாக்குகள்,



புதிய தமிழகம் (பால்ராஜ்): 4,119 வாக்குகள் இதர வேட்பாளர்களான பொன்னுத்தாய் (அ.இ.பு.த.ம.மு.க) 2,249 வாக்குகளும், வீரலெட்சுமி 183 வாக்குகளும் பெற்றனர். இந்தத் தொகுதியில் 637 பேர் நோட்டாவிற்கு வாக்களித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றி அறிவிக்கப்பட்டதும் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் செண்பக விநாயகம், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா, ஓபிஎஸ் அணி ஆர்.ஆர். மூர்த்தி பாண்டியன் ஆகியோர் ராஜா எம்எல்ஏவிற்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.*6,583 வாக்குகள் வித்தியாசத்தில் திமுக வெற்றி! வாசுதேவநல்லூர் தொகுதியைத் தக்கவைத்த ராஜா எம்எல்ஏ*தென்காசி மாவட்டத்தின் முக்கியத் தொகுதியான வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியின் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. மொத்தம் 1,90,256 வாக்குகள் பதிவான நிலையில், திமுக வேட்பாளர் ராஜா எம்எல்ஏ அவர்கள் மீண்டும் வெற்றி வாகை சூடியுள்ளார்.

தொடக்கம் முதலே விறுவிறுப்பாக நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையின் முடிவில், வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் பின்வருமாறு: திமுக (ராஜா எம்எல்ஏ): 63,045 வாக்குகள் (வெற்றி), பாஜக (ஆனந்தன் அய்யாசாமி): 56,462 வாக்குகள், தவெக (அமுதாராணி): 45,862 வாக்குகள், நாம் தமிழர் (இசை மதிவாணன்): 12,856 வாக்குகள், புதிய தமிழகம் (பால்ராஜ்): 4,119 வாக்குகள் இதர வேட்பாளர்களான பொன்னுத்தாய் (அ.இ.பு.த.ம.மு.க) 2,249 வாக்குகளும், வீரலெட்சுமி 183 வாக்குகளும் பெற்றனர். இந்தத் தொகுதியில் 637 பேர் நோட்டாவிற்கு வாக்களித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றி அறிவிக்கப்பட்டதும் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் செண்பக விநாயகம், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பிச்சையா, ஓபிஎஸ் அணி ஆர்.ஆர். மூர்த்தி பாண்டியன் ஆகியோர் ராஜா எம்எல்ஏவிற்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.



# அறிமுகத் தேர்தலிலேயே முத்திரை பதித்த அன்பகம் கலை மகன்! 10,299 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி

தென்காசி மே.6-

தென்காசி சட்டமன்றத் தொகுதியில் இந்த முறை கடும் மும்முனைப் போட்டி நிலவிய நிலையில், திமுக சார்பில் முதன்முறையாகக் களமிறங்கிய அக்கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் அன்பகம் கலையின் மகன் டாக்டர் கலை கதிரவன் மாபெரும் வெற்றி பெற்றுள்ளார்.வெற்றிப் புள்ளிவிவரம்:தென்காசி தொகுதியில் பதிவான மொத்த வாக்குகள் 2,34,987. விறுவிறுப்பாக நடைபெற்ற வாக்கு எண்ணிக்கையின் இறுதி நிலவரம் இதோ:டாக்டர் கலை கதிரவன் (திமுக): 79,699 வாக்குகள் (வெற்றி), செல்வ மோகன்தாஸ் பாண்டியன் (அதிமுக): 69,400 வாக்குகள், ராஜ பிரகாஷ் (தவெக): 55,543 வாக்குகள், புஷ்ப லதா (நாம் தமிழர்): 16,394 வாக்குகள், நோட்டா (NOTA): 673 வாக்குகள்.

வெற்றி பெற்ற டாக்டர் கலை கதிரவன் அவர்களுடன் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன் மற்றும் முன்னாள் தெற்கு மாவட்டச் செயலாளர் சிவ பத்மநாதன் ஆகியோர் உடனிருந்து வெற்றிக் கொண்டாட்டத்தில் பங்கேற்றனர்.



■ மதுரையில் இருந்து புறப்பட்ட கள்ளழகர் அழகர் கோவில் சென்றடைந்தார்.



# தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் இரவு 7 மணி வரை மழைக்கு வாய்ப்பு

சென்னை:மே.6-

தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் இரவு 7 மணி வரை மழைக்கு வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது. தர்மபுரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், ராமநாதபுரம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, தேனி, நீலகிரி, திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தகவல் அளித்துள்ளது

# நட்சத்திரத் தொகுதியில் புதிய சரித்திரம்! மதுரை மேற்கில் தவெக 'மாஸ்'!

மதுரை மே 06-

கடந்த ஏப்ரல் 23 அன்று நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில், மதுரை மேற்குத் தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை மதுரை கல்லூரியில் நடைபெற்றது. மொத்தம் பதிவான 2,14,248 வாக்குகளில், தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் தங்கப்பாண்டி 87,539 வாக்குகள் பெற்று இமாலய வெற்றி பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட திமுகவின் ரகு பாலாஜி மற்றும் அதிமுகவின் முன்னாள்



அமைச்சர் செல்லூர் ராஜு ஆகியோரை வீழ்த்தி, 12,055 வாக்குகள் வித்தியாசத்தில் தங்கப்பாண்டி வெற்றி வாகை சூடினார். இறுதிச் சுற்று வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட பிறகு, வெற்றி பெற்ற த.வெ.க வேட்பாளர் தங்கப்பாண்டிக்குத் தேர்தல் பார்வையாளர்கள் அதிகாரப்பூர்வமாக வெற்றிச் சான்றிதழை வழங்கினார்கள்.

முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு போன்ற முக்கிய அரசியல் ஆளுமைகளை எதிர்த்துப் போட்டியிட்டுத் தங்கப்பாண்டி வெற்றி பெற்றிருப்பது மதுரை அரசியல் வட்டாரத்தில் பெரும் மாற்றமாகப் பார்க்கப்படுகிறது.



# சேலம் தெற்கு தொகுதி தவெக வேட்பாளர் விஜய் தமிழன் பார்த்திபன் வெற்றி பெற்றார்

சேலம் மே 06-

சேலம் தெற்கு சட்டசபை தொகுதியில் தவெக வேட்பாளராக விஜய் தமிழன் பார்த்திபன் 91,371 வாக்குகள் பெற்று, 58,002 வாக்குகள் பெற்ற மிதுன் திமுக வேட்பாளர் லோகநாதனை விட 33,369 வாக்குகள் வித்தியாசத்தில் பெற்று வெற்றி பெற்றார். சேலம் தெற்கு தொகுதி தவெக வேட்பாளர் விஜய் தமிழன் பார்த்திபன் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் அலுவலர் இளங்கோவனிடமிருந்து பெற்றுக் கொண்டார்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000